பஸ் நிலையம் முன்பாக
சுன்னாகம்.
Registered as a Newspaper

உயர் கல்வி நிலையம்
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
G C.E. O/L
பகல் நேர வகுப்புக்கள்
தட்டெழுத்து,
சுருக்கெழுத்து
மகளிர் மட்டும்
ஆரம்பம்: 19-4-86

# உதயன்

விலை ரூ. 1/-
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

உயர் கல்வி நிலையம்
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
G.C.E. A/L 87 Aug.
கணக்கியல் - சௌந்தி
பொருளியல் - தர்மா
வர்த்தகம் - விக்கி
தமிழ் - திருமதி சிவலிங்கராஜா
புவியியல் - இராஜேஸ்வரன்
ஆரம்பம்: 19-04-86

கடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ பங்குனி மீ 28 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 29 (10 04 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:123

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை.....

# இலங்கைக்கு உதவி எதுவும் செய்ய வேண்டாம்

## நிதி வழங்கும் நாடுகளிடம் முன்னாள் பிரி. மந்திரி வேண்டுகோள்

லண்டன், ஏப்ரல் 9

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை புதிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த இலங்கைக்கு எவ்வித உதவியும் செய்ய வேண்டாம்.

இப்படி இலங்கைக்கு உதவும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் முன்னாள் கடல்கடந்த நாடுகளின் அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த திருமதி ஜூடித் ஹார்ட் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மனித உரிமைகளை வலியுறுத்தும் சர்வதேச விழிப்பு (International Alert) இயக்கத்தின் பேரால் திருமதி ஜூடித் ஹார்ட் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் ஸ்தாபனமான (aid Consortium) மே மாதம் கூட உள்ளது.

அதற்கான பூர்வாங்கக் கூட்டம் தற்போது வாஷிங்டனில் நடந்து கொண்டிருக்கின்றது.

பூர்வாங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாடுகளுக்கு பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் ஜூடித் ஹார்ட் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துச் செயற்படுத்த இலங்கை அரசுக்கு உதவும் நாடுகள் நிதிஉதவி அளிக்கக் கூடாது —

இனப்பிரச்சினைக்கு உடனடிச் சமாதானத் தீர்வு கண்டால் மட்டுமே நிதி உதவி செய்வோம் என்று இந்த நாடுகள் இலங்கைக்குக் கூறவேண்டும்—

அப்படித் தீர்வு காணப் (4 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப எங்கடை வெங்கடேசுவரன் சொன்னது சரியாய்ப் போச்சு.

இந்தியாவில் இருந்து ஒருவர் இஞ்சை வாறதுக்குப் பதில் இப்ப ஹமீத் இஞ்சையிருந்து போகப்போறு? பாத்தியளே......!

## ஒய்வூதியம் வழங்கப்படும் திகதி விவரம்

நல்லூர், ஏப்ரல் 10

இலங்கை வங்கி கச்சேரிக் கிளைகளில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்க்குரிய ஒய்வூதியம் எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் யாழ் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

ஒய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் பற்றிய விவரம் வருமாறு.

12 ஆம் திகதி சனிக்கிழமை சிவில் ஒய்வூதியம் பெறும் சகலருக்கும்.

13 ஆம் திகதி விதவைகள், அனாதைகள், ஆசிரியர். ஆசிரிய விதவைகள், (4 ஆம் பக்கம் பார்க்க)

# தலைமன்னாரில் நிலக் கண்ணி

## பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட நால்வர் பலி

— அலுவலகச் செய்தியாளர்: பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

தலைமன்னாரில் நேற்றுக் காலை நிலக்கண்ணித் தாக்குதல் இடம் பெற்றது.

ஒரு பொலிஸ் உயர் அதிகாரி உட்பட நான்கு பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நேற்றுக்காலை சுமார் ஏழு மணியளவில் மீன் வாங்குவதற்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஜீப்பில் புறப்பட்டார்

தலைமன்னார் இறங்குதுறையில் மீனை வாங்கி விட்டு ஜீப்பில் பொறுப்பு அதிகாரி பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்

அச்சமயம் இரண்டு சிங்கள மீனவர்களும் ஜீப்பில் ஏறிக்கொண்டனர்.

எல்லாமாக நான்கு பேருடன் ஜீப் தலைமன்னார் பழைய பாலத்துக்கு அருகில் வந்து கொண்டு இருக்கையில் நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் சிக்கியது

இதனால் ஜீப் தூக்கி வீசப்பட்டது.

ஜீப்பில் இருந்த நான்கு பேரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

நிலக்கண்ணி வெடித்ததைத் தொடர்ந்து போராளிகள் ஜீப்பை நோக்கிச் சுட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் பொறுப்பு அதிகாரி பராக்கிரம பெரேரா, ஜீப் சாரதியான கான்ஸ்டபிள் சில்வா, இரண்டு சிங்கள மீனவர் ஆகியோரே மரணமானவர்கள்

சம்பவம் நடந்த இடத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை வீதி 4 ஆம் நாளாகத் தடை

நல்லூர், ஏப்ரல் 10

நீர்வேலி, கோப்பாய் சந்திகளில் மக்கள் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் திருப்பி ஒப்படைக்கப்படும்வரை தமது மறியல் போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது என அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியூடாக செல்லும் சகல வாகனங்களும் தொடர்ந்து இராசபாதையூடாக செல்லுகின்றன.

நேற்றுடன் நான்காவது நாளாக இம்மறியல் போராட்டம் நடைபெறுகிறது.

தீர்வு எதுவும் ஏற்படாவிடில் கோப்பாய்-கைதடி பாதையையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது

## வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை பஸ் இணைப்புச் சேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

புத்தாண்டு முன்னிட்டு வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 15 விசேஷ பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினம் மேற்கொண் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காணிகளைப் பார்த்து வரச் சென்ற மூவர் வெட்டிக் கொலை

யாழ்ப்பாணம், ஏப் 10

கைவிடப்பட்ட காணிகளைப் பார்த்து வரச் சென்ற 3 தமிழர்கள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் காட்டினுள் கிடக்கக் காணப்பட்டன

டொலர்பாம், கென்பாம் பகுதிகளில் வாழ்ந்து வந்த 3 தமிழர்களுக்கே இக்கதி ஏற்பட்டது என்று வவுனியா பிரஜைகள் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இப்பகுதி இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்ட சம்பவத்தை (4 ஆம் பக்கம்பார்க்க)

## யாழ் தபாலக ஊழியர்கள் தாக்கப்பட்டனர்

நல்லூர், ஏப்ரல் 10

யாழ் தபாலக ஊழியர்கள் இருவர் மாங்குளத்தில் சிறுடையினரால் தாக்கப்பட்டனர்.

இதனால் யாழ் வரும் தபால் பொதிகள் நேற்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்துக்கு ஒரு பண்பாட்டுக்குழு

### செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

யாழ் மாவட்டத்துக்கு என்று பண்பாட்டுக்குழு ஒன்றை அமைக்கும் நோக்கத்துடன் இன்று (வியாழக்கிழமை) காலை யாழ் செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறும்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் இக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

கலாசார விவகாரங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாகவே இக் கூட்டம் அழைக்கப்பட்டுள்ளது.

பண்பாட்டுத்துறை செயற்பாட்டையும் நிதி ஒதுக்கீட்டையும் ஒரு சீரிய ஒழுங்கு முறையில் தயாரிப்பதற்குப் பண்பாடு, கலை, கலாசாரத் துறையினரின் ஆலோசனையையும் ஒத்துழைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப்ரல் 10

நாதிகள் வேலை நிறுத்தத்துக்கு உடனடித் தீர்வு காணும்படி அரசாங்கத்தைக் கேட்டு ஐந்து பிக்குகள் நேற்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள தும்புள்ளைச் சந்தியில் இருக்கும் புத்தர் சிலைக்கு முன்னால் ஐவரும் இந்த உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்தனர்.

ஹெலிக்கொப்டர்

# தாக்குதல் பகுதி பலாலியில் நேற்று விஸ்தரிக்கப்பட்டது

## சூழ உள்ள கிராம மக்கள் பதற்றம்

பலாலி, ஏப்ரல் 10

பலாலி இராணுவ முகாமையும், பலாலி விமானநிலையப் பகுதியையும் நோக்கி நேற்றுக் ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதுவரை நடைபெற்றதை விட, தாக்குதல் நடைபெற்ற பகுதி நேற்று விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

பலாலி வடக்குப் பகுதி, வளலாய் வீதி, வயாவிளான், ஒட்டகப்புலம் பகுதிகளிலும் குரும்பசிட்டி, மயிலிட்டிப் பகுதிகளிலும் இத்தாக்குதல் விரிவாக நடத்தப்பட்டது.

காலை 7.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஹெலிக்கொப்டர் சூட்டுச் சம்பவத்தை அடுத்து நண்பகல் 12.35 மணிக்கு இரண்டாவது முறை தாக்குதல் தொடர்ந்தது.

இத்தாக்குதல் சம்பவங்கள் நடை பெறும் பகுதி விரிவடைந்து வருவதனால் சூழவுள்ள கிராமத்து மக்கள் மத்தியில் பதற்றமான நிலைமை தோன்றியுள்ளது

### சுபநேரம்

10 4- 1986

வியாழக்கிழமை

சுபநேரம்!

7.36 முதல் 9 06 வரை

ராகுகாலம்!

1.36 முதல் 3.06 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# வானைத் துரத்தி ஹெலிக்கொப்டர் சுட்டது

## இருபாலையில் சம்பவம்

நல்லூர், ஏப்ரல் 10

பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று வான் ஒன்றைக் கண்டவுடன் துரத்திச் சுட்டது. இச் சம்பவத்தில் 5 வீடுகளும் 2 கடைகளும் சிறிது சேதம் அடைந்தன.

இருபாலை கிழக்கில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடந்தது.

ஹெலிக்கொப்டரால் துரத்தப்பட்ட வான் டிராக்டர் ஒன்றுடன் மோதியது.

ஹெலிக்கொப்டர் சூட்டின் போது ஆட்களுக்குக் காயம் ஏற்பட்ட தகவல் எதுவும் இல்லை.

ஹெலிக்கொப்டர் சூட்டின் பின்பு வீதியில் கிடந்த குண்டுத் துண்டுகளை மக்கள் பொறுக்கியதை காணக் கூடியதாக இருந்தது.

## மற்றும் ஒரு வல்வை இளைஞர் மரணமானார்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 10

வலைகுடாவில் வைத்து ஈரானிய விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்கான 'பெற்றோ ஸ்டார் —16'' என்ற எண்ணெய்க் கப்பலில் இறந்தவர்களில் இரு வல்வை வாசிகள் அடங்கி உள்ளனர்.

ஒருவர் ஆறுமுகம் பாலசந்திரமூர்த்தி. இதுபற்றி ஏற்கனவே உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

தற்போது யோகராஜ் செல்வரத்தினம் என்பவரும் இறந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யோகராஜ் செல்வரத்தினம் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்பு மரணமானார்.

## மக்பூல் கொழும்புக்கு

கொழும்பு, ஏப்ரல் 10

மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப். மக்பூல் மன்னாரில் நிலவும் உணவு, எரிபொருள் நெருக்கடி பற்றி சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி நிவாரணம் காண கொழும்பு சென்றிருக்கிறார்.

## வட்டுக்கோட்டையில் இரு இடங்களில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

வட்டுக்கோட்டைத் தொகுதியில் கடந்த புதன்கிழமை இரவு இரண்டு இடங்களில் பெரும் கொள்ளைகள் இடம்பெற்றன.

சித்தன்கேணியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரது வீட்டில் ஒருலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள நகைகள் கொள்ளையிடப்பட்டன.

ஆயுதந் தாங்கிய சுமார் பத்துப்பேர் அதிகாலை சுமார் ஒன்றரை மணியளவில் சென்று இக்கொள்ளையை நடத்தினர்.

இதேவேளை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பிரபல வைத்தியர் ஒருவரது வீட்டிலும் அதே இரவு பல லட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளை இடப்பட்டன.

இரவு சுமார் 12 மணியளவில் இக்கொள்ளை நடந்தது அங்கும் ஆயுதம் தாங்கிய சுமார் பத்துப் பேர் கொள்ளையை நடத்தினர்.

இரண்டு கொள்ளைகளையும் ஒரே கோஷ்டியினரே செய்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

யூனியன் பிரதேச அந்தஸ்து

# புதிய யோசனைகளுடன் ஹமீத் டில்லி செல்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 10

இனப்பிரச்சினைக்கான புதிய யோசனைகளுடன் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் புதுடில்லி செல்கின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யூனியன் பிரதேச அந்தஸ்து உள்ள அமைப்புக்களை உருவாக்குந் திட்டம் தான் புதிய யோசனைகளில் அடங்கியுள்ளது என்று தெரியவருகிறது.

இந்தியாவில் பாண்டிச்சேரி மாநிலம் யூனியன் பிரதேசமாக அமைந்துள்ளது.

அந்த மாதிரியான யோசனைகளுடன் தான் அமைச்சர் ஹமீத் புதுடில்லி செல்கிறார்.

ஏப்ரல் 16 ஆம் திகதி புதுடில்லியில் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் ஆரம்பமாகிறது.

அக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக அமை (4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் வன்செயல்

## நீடிப்பு வல்லரசுத் தலையீட்டுக்கு வழி வகுக்கும் என்கிறார் பகத்

புதுடில்லி, ஏப்ரல் 9

இலங்கையில் வன்செயல்கள் நீடிக்கின்றன. இந்த நிலை தொடர்ந்து இருந்து வருமானால் பெரிய வல்லரசு ஒன்று தலையிடுவதற்கு இடமளிப்பதாக முடியும்.

இப்படி இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பலிராம் பகத் எச்சரித்தார்.

அமைச்சர் இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை பேசுகையில் மேலும் சொன்னதாவது:

இலங்கை அரசிடம் இருந்து பிழையான தகவல்கள் தான் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு புறம் அரசியல் தீர்வு என்று சொல்லிக் கொண்டு மறுபுறம் இராணுவத் தீர்வுக்கு இலங்கை அரசு முயற்சிக்கின்றது.

இதே நிலையில் வன்செயல்கள் நீடித்துக் கொண்டு போனால் பெரிய வல்லரசு ஒன்று தலையிடுவதற்கு இடம் அளிப்பதாக முடியும்.

புதிய யோசனைகளுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீத் டில்லி வருகிறார்

புதிய யோசனைகள் கிடைத்ததும் தமிழர் அமைப்புக்களின் பதி (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜேந்தர் புதுமையானவர் என்கிறார் நடிகை ஸ்ரீவித்யா

'மைதிலி என்னைக் காதலி' படத்தில் நடிக்க அழைப்பு வந்தபோது என்னை எல்லோரும் பயமுறுத்தினார்கள். என்றாலும் நான் அப்படத்தில் நடித்தே தீருவேன் என்ற முடிவுக்கு வந்தேன்.

நடிகை ஸ்ரீவித்யா இப்படிக் கூறுகிறார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்,

'மைதிலி என்னைக் காதலி' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டபோது பலர்

### தினசரி சினிமா

என்னைப் பயமுறுத்தினார்கள்.

நிறைய நாட்கள் வேலை செய்ய வேண்டி வரும், ராஜேந்தர் ஒரு முரட்டு ஆசாமி என்று எல்லாம் சொன்னார்கள்.

அவருடைய படத்தில் நடிக்க ஆரம்பித்தபோது கூட அவர் தாடியும் முகமும் பார்த்து அப்படியே தான் இருக்குமோ என்று நினைத்தேன்.

ஆனால் இது எல்லாம் எவ்வளவு தவறான வார்த்தைகள் என்பதை படப்பிடிப்பின் போது தான் தெரிந்து கொண்டேன்.

அவரது படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தால் கூட, அந்த நல்ல மனிதரின் நட்புக் கிடைப்பதற்காக முயற்சி செய்திருப்பேன்.

ஒரே சமயத்தில் எல்லா வேலைகளையும் தைரியமாய் ஏற்று நடத்துவதில் [illegible] இருக்கிறாரே என்று நான் அதிசயப்பட்டு இருக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய மனமுருக்கும் உபசரிப்பை மறக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரை பாலசந்தருக்குப் பிறகு மதிக்கக்கூடிய ஒரு நல்ல இயக்குநர் டி. ராஜேந்தர் தான்" என்றார்.

---

அமெரிக்க அணுசக்தி

# நிவாடாப் பரிசோதனை பின்போடப்பட்டது

## காரணம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை

லண்டன், ஏப்ரல் 9

நிவாடாப் பாலைவனத்தில் நடத்தப்படவிருந்த அமெரிக்காவின் அணுசக்திப் பரிசோதனை பின்போடப்பட்டுள்ளது.

நடத்தாது பின்போட்டதற்குரிய காரணத்தை அமெரிக்கா உடனடியாக அறிவிக்கவில்லை.

நிவாடாப் பாலைவனத்தின் பாதுகாப்பான பகுதியொன்றில் அமெரிக்கா தனது அணுசக்திப் பரிசோதனைகளை நடத்திவருவது தெரிந்ததே.

இதனிடையே சர்வதேச சூழல் பாதுகாப்பு இயக்கமான பசுமை பேணும் சமாதான இயக்கம் (கிறீன்பீஸ்) நிவாடாப் பரிசோதனையைத் தடுக்க முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த 7 தொண்டர்கள் மிகப் பாதுகாப்பான அந்த இடத்துக்கு அண்மையில் உள் நுழைந்து சென்று விட்டதாகவும் பாதுகாப்புத் துறையினரால் அவர்களை வெளியேற்ற முடியாதிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நிவாடாப் பரிசோதனை தொடர்ந்து பல கண்டனங்களுக்கும் உட்பட்டுள்ளது. சென்றமாதமும் அமெரிக்காவால் நடத்தப்பட்ட நிவாடாப் பரிசோதனையை ரஷ்யா, பாரதம் உட்பட சமாதானம் விரும்பும் பல நாடுகளும் கண்டித்தன.

அமெரிக்கா நிவாடாப் பாலைவனத்தில் தொடர்ந்து அணுசக்திப் பரிசோதனை மேற்கொண்டால் இந்த விடயத்தில் தாம் ஒருதலைப் பட்சமாக விதித்துள்ள அணுசக்திப் பரிசோதனைத் தடை (மொறட்டோரியம்)யை உடனடியாக நீக்கிவிடப் போவதாக ரஷ்யா எச்சரிக்கையொன்றையும் ஏற்கனவே விடுத்திருந்தது.

வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்;

நிவாடாப் பரிசோதனைகளுக்கும் அமெரிக்க, ரஷ்ய பேச்சுவார்த்தைகளுக்கும் தொடர்பு இல்லை. இருநாட்டு உறவுகளும் இதனால் பாதிப்படையத் தேவை இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய அதிபர் மிக்கெயில் கொர்பச்சேவ் ரஷ்ய நகரமொன்றில் நடைபெற்ற கூட்டமொன்றில் கருத்துத் தெரிவித்தபொழுது;

அணு ஆயுதங்களால் ஏற்படக்கூடிய பேரழிவிலிருந்து மனிதகுலம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கு படிப்படியான ஆயுதக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இத்தவிடயத்தில் அமெரிக்க நடவடிக்கைகள் திருப்தி தருவதாக இல்லையே எனக் கவலை தெரிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற சுதந்திரமான பேச்சுவார்த்தைகளே பயனுள்ளதாக அமையமுடியும் எனவும் கொர்பச்சேவ் கருத்து வெளியிட்டுள்ளார்.

அடுத்தமாதம் அமெரிக்க உப ஜனாதிபதியும் ரஷ்ய உப அதிபரும் சந்தித்துப்பேசஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

றேகன் கொர்பச்சேவ் கூடிப்பேசும் உச்சிமாநாடுக்கு இந்தச் சந்திப்பு முன்னோடியாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### பாங்கொக் ஹோட்டலில் குண்டு வெடிப்பு

பாங்கொக், ஏப். 9

தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக்கில் உள்ள பாரிய ஹோட்டல் ஒன்றில் குண்டு வெடித்ததால் அங்கிருந்த 3 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஹோட்டலில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கஸ்பார் வெயின் பேகரும் தாய்லாந்து பிரதமரும் மேற்கொள்ளவிருந்த பேச்சுவார்த்தைகள் பின்போடப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்புக்கு யாரும் உரிமை கோரவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

மிஸோ தேசிய முன்னணி

## தலைவர் லால் டெங்கா பாரத அரசு பேச்சு

### மிஸோரத்தில் சமாதானத்தை உருவாக்குவது குறிக்கோள்

புதுடில்லி, ஏப்ரல் 9

பாரதத்தின் வடக்குப்புற மிஸோரம் பகுதியில் பிரிவினைகோரிப் போராடி வரும் விடுதலைப் போராளிகள் சமாதானப் பேச்சுக்களை பாரத அரசுடன் ஆரம்பித்துள்ளனர்.

தடை செய்யப்பட்டுள்ள மிஸோ தேசிய முன்னணியின் தலைவர் லால் டெங்கா பாரத உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பி.வி. நரசிம்மராவைப் புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார். முன்னணியைச் சேர்ந்த வேறு இரு தலைவர்களும் அவருடன் கூடிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

பங்களாதேஷ், பர்மா ஆகிய நாடுகளின் எல்லைகளிலுள்ள இந்தப் பகுதியில் குழப்பங்களைத் தணிப்பதே பேச்சுக்களின் குறிக்கோள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிஸோரப் அரசின் முதலமைச்சர் தங்கௌரா உட்பட அவரின் அதிகாரிகள் குழுவொன்று ஆலோசனைகளுக்காக விரைவில் டில்லி வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வெளி உலகில்

## பாரதத்தின் பாதுகாப்புக்கு எல்லை நாடுகளால் சவால்

### பிரதமர் ராஜீவ் லோகசபையில் கவலை

புதுடில்லி, ஏப் 9

எல்லைப்புற நாடுகள் சிலவற்றின் நிலைமைகளும் போக்குகளும் பாரதத்தின் பாதுகாப்புக்கு பெரியதொரு சவாலாக இருக்கிறது.

இவ்வாறு பிரதமர் ராஜீவ்காந்தி லோகசபையில் உரையாற்றும்போது வருத்தப்பட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

பாகிஸ்தான் அணுசக்திப் பரிசோதனைகளில் அளவு மீறிய அக்கறை காட்டி வருகிறது.

சமாதான நோக்கங்களுக்காகவே பாகிஸ்தான் அணுப் பரிசோதனைகளை மேற்கொள்வதாகக் கூறினாலும் அச்சுறுத்தலுக்குப் பயன்படுத்தும் நோக்கமே இதன் உள்ளீடாக இருக்கிறது.

இஸ்ரவேல் பாகிஸ்தான் இரகசிய உறவும் இலங்கையின் ஸ்திரமற்ற தன்மைகளும் குறிப்பாக மேற்கண்ட இருநாடுகளின் இலங்கைத் தொடர்புகளும் பாரதத்துக்குப் பலத்த கவலைதரக்கூடிய அம்சங்களாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாரத பாதுகாப்புக்குப் பயன்படக் கூடியதான பெரியதொரு விமானந்தாங்கிக் கப்பலைக் கொள்முதல் செய்யும் விடயம் ஓரளவு நிறைவடையும் நிலையை எட்டிவிட்டதாகவும் ராஜீவ் தமது பேச்சின் போது குறிப்பிட்டார்.

### ஒட்டகங்களில் வைத்தியப் பணி

சாட் நாட்டின் பாலைவனப் பகுதி மக்களின் குழந்தைகளுக்கு ஒட்டகங்களில் போய் நோய் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

'யூனிசெப்' நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5க்கு 1 என்ற விகிதத்தில் குழந்தைகள் இறந்து கொண்டிருப்பதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

---

## அமெரிக்க ஏவாயுதம் பாகிஸ்தான் வரும்

### 2030 எதிரடி ஏவுகணைகள்

### இதன் பெறுமதி 2 கோடி டாலர்

வாஷிங்டன், ஏப் 9

பாகிஸ்தானுக்கு 2030 டாங்கி எதிரடி ஏவுகணைகளை அமெரிக்க அரசு வழங்க முடிவு செய்துள்ளது.

அமெரிக்க-பாகிஸ்தான் ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கை அடிப்படையிலேயே இந்த ஏவுகணைகள் வழங்கப்படுவதாக அமெரிக்க தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 2 கோடி டாலர் தொகை கணக்கிடப்பட்டுள்ளதாகவும் இந்த விடயத்தில் காங்கிரஸ் அனுமதியைப் பெற அரசு காத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

---

## சிப்பாய்கள் வீட்டுக்கு அனுப்பிய பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 10

மண்டைதீவு, முருங்கன் ஆயுதப்படை முகாமைச் சேர்ந்தவர்கள் வீட்டுக்காரர்களுக்கு அனுப்பிய பணம் செவ்வாய் நண்பகல் இனந்தெரியாதவர்களால் அபகரிக்கப்பட்டது.

முருங்கன் தபால் நிலையத்துக்கு அருகில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

முகாமில் இருக்கும் சில ஆயுதப்படையினரின் சம்பளத்தை ஆயுதப்படை முகாமில் இருக்கும் சிற்றூழியர் ஒருவர் தபால் நிலையத்தில் செலுத்தி மணியோடர் மூலம் அவர்களது வீடுகளுக்கு அனுப்புவது வழக்கம்.

சம்பவ தினம் பிரஸ்தாப சிற்றூழியர் சம்பளப் பணத்துடன் தபால் நிலையத்தை நோக்கிச் சென்றபோது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கி முனையில் சம்பளத்தை அபகரித்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அன்று பிற்பகல் முருங்கன் முகாம் ஆயுதப்படையினர் முருங்கன் தபால் நிலைய ஊழியர்களைக் கைது செய்தனர். ஊழியர்கள் முகாமில் விசாரணை செய்யப்படுகின்றனர் என்று அறியப்படுகிறது.

முருங்கன் தபால் நிலையம் பிற்பகலுடன் மூடப்பட்டது.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## ஊர்காவற்றுறை பட்டின வாசிகளுக்கு நிவாரணம்

### உதவி அரச அதிபர் பணிமனையில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 10

பதற்ற நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வசதியற்ற ஊர்காவற்றுறை பட்டின வாசிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது பற்றி ஆராய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை (வெள்ளிக்கிழமை) காலை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தீவுப் பகுதியில் உள்ள பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், சனசமூக நிலையத் தலைவர்கள், மகளிர்குழுத் தலைவிகள், சமயத் தலைவர்கள், ஆசிரியர் சங்கத் தலைவர்கள், அரச திணைக்களத் தலைவர்கள், வங்கி முகாமையாளர்கள், தொண்டர் ஸ்தாபனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து பெரும்பாலும் தினமும் நடத்தப்படும் பீரங்கித் தாக்குதல் காரணமாக பட்டினத்தில் உள்ள வசதி படைத்தவர்கள் வேறு இடங்களுக்குச் செல்கின்றனர்.

ஆதரிப்பார் இல்லாத குடும்பங்கள் சின்ன மடு மாதா கோயில், சாட்டி மாதா கோயில் வளவுகளில் பூவரசமர ஆலமர நிழல்களில் தங்குகின்றனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கும்படி விடப்பட்ட கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் நிர்க்கதியான இக்குடும்பங்களுக்கு எப்படி உதவுவது என்பது பற்றி ஆராயவே நாளை நடைபெறும் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

### ஊர்காவற்றுறை வசந்த நவராத்திரி

யாழ்ப்பாணம், ஏப். 10

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் வசந்த நவராத்திரி விழா இன்று (வியாழக்கிழமை) ஆரம்பமாகின்றது.

ஏப்ரல் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விழா பூர்த்தியடையும்.

திருவிழாக் காலத்தில் லட்சார்ச்சனை, குளிர்த்தி, புதிய சித்திர பஞ்சத்திருவிழா ஆகியன இடம்பெறும்.

### பாசறை

வல்வெட்டித்துறை, ஏப் 10

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி விஞ்ஞான ஆய்வுச் சங்கத்தினரால் வானியல் அவதானிப்புப் பாசறை இன்று 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை 5 மணிக்கு முடிவடையும்.

இவ்வானியல் ஆராய்ச்சிப் பாசறையில் உடுத்தொகுதிகள், இராசிகள் பற்றிய விளக்கங்களும், உடுத்தொகுதி சம்பந்தமான திரைப்படமும், இடம்பெறும். ஹெலீஸ் வால் நட்சத்திரம் பற்றியும் விளக்கங்கள் அளிக்கப்படும்.

## இராணுவ முகாம் சென்ற லொறி கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.10

செவ்வாய் நண்பகல் பொருள்களுடன் கோக்காவில் இராணுவ முகாம் நோக்கிச் சென்ற லொறி ஒன்று இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது.

லொறியை கொக்காவில் முகாமுக்கு சமீபமாக வழி மறித்தவர்கள் பொருள்களை லொறியுடன் கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஆயுதப்படையினர் வீதியால் செல்லும் வாகனங்களை வழிமறித்து பலத்த சோதனையிட்டனர்: தாக்குதலும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் வாகன போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

### பருத்தித்துறையில் வெளிக்கள சுகாதார சேவை

பருத்தித்துறை, ஏப் 10

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரி நெருக்கடியைக் குறைக்குமுகமாகவும் நோயாளரின் போக்குவரத்துச் சிரமங்களைத் தவிர்க்குமுகமாகவும் வெளிக்கள சுகாதார சேவையை நடத்தவுள்ளனர்.

### செல்வா கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்

பலாலி, ஏப் 9

கடந்த 5.4.86ம் திகதி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற தெல்லிப்பளை தந்தை செல்வா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டின் புதிய உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. இ.கந்தரத்தினம். உப தலைவர்கள்: 1. திரு. செ. அருணாசலம். 2. திரு.மு. சிவஞானசுந்தரம். செயலாளர்: திரு. இ. செல்லத்துரை. உப செயலாளர்: திரு. செ. மூருகையா. பொருளாளர்: திரு தி. சி. அப்புத்துரை.

என்பவர்களுடன் 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## கல்விப் பணிப்பாளர் சேவையில் யாழ் மாவட்டம் முன்னேறும்

### பாராட்டு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஏப் 10

இன்றைய கல்விப் பணிப்பாளரின் செயற்பாடுகள் அவரது முகாமைத்துவத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. கல்வித்துறையில் அதிகாரங்களைப் பெற்றும் நிர்வாகத்துறையில் பல வருட அனுபவங்களைக் கொண்டும் இருப்பதனால் கல்விப் பணிப்பாளரின் சேவைக்காலத்தில் யாழ்.மாவட்ட கல்வி பல முன்னேற்றங்களைப் பெறும் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கை உண்டு.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற திரு இரா சுந்தரலிங்கத்துக்கு நவாலி மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தவர்களும் பழைய மாணவர்களும் ஒன்றிணைந்து பாராட்டு விழா நடத்தினர்.

அதில் கலந்துகொண்டு பேசிய வடமாநில அதிபர்கள் சங்கத் தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு க. அருணாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு செ கதிர்காமத்தம்பி தலைமையில் விழா நடைபெற்றது.

யாழ் கல்வித் திணைக்களக் கல்வி அதிகாரி திரு க கந்தசாமி, ஈழமுரசு பிரதம ஆசிரியர் திரு. எஸ் திருச்செல்வம் ஈழநாடு நிர்வாக ஆசிரியரும் [illegible] யாழ் இந்துக்கல்லூரி அதிபருமான திரு என் சபாரத்தினம் நவாலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சி. ஜே. இளையதம்பி, பழைய மாணவி செல்வி க இராஜமணி, மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சதானந்தன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பாராட்டுரை வழங்கினர்.

வட மாநிலக் கல்விப் பணிப்பாளருக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்வித்தியாலயத்தில் சென்ற ஆண்டு லீவு பெறுது கடமையாற்றிய திரு ச செல்லையா, திருமதி இராசம்மா இராசரத்தினம் ஆகியோருக்கும் ஒருநாள் மட்டும் லீவு பெற்றுச் சேவையாற்றிய அதிபர் திரு செ. கதிர்காமத்தம்பிக்கும் கல்விப்பணிப்பாளரினால் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பதிலுரை வழங்கும் போது, ஆசிரியர்கள் தமது பணியைத் தெய்வப்பணியாகக் கொண்டு சேவையாற்ற வேண்டும் என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு அ சதானந்தன் நன்றி நவின்றார்.

## நீரில் மூழ்கிய இளைஞர் சடலம் மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, ஏப்ரல் 10

தொச்சிமுனைக் கிராமத்தில் ஆயுதப்படையினரின் தாக்குதலுக்காளாகி நீரில் மூழ்கிய இளைஞரின் சடலம் கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் மீட்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த இளைஞரின் பெயர் கருணாகரன்.

நீரில் மூழ்கிய இந்த இளைஞனின் சடலத்தை [illegible] அகப்படவில்லை. அதன் பின்னர்தான் இனந்தெரியாதவர்கள் [illegible] எடுத்துச் சென்றனர்.

### நீத்தார் புகழாரம்

### ஆசிரியமணி தம்பிரத்தினம்

ஆசிரிய உலகிற்குப் பெருந்தொண்டாற்றிய நா. தம்பிரத்தினம் 6.3.86 இல் காலமான செய்தியறிந்து ஆசிரியர் உலகம் கலங்கியது.

தம்பிரத்தினம் ஓர் நல்லாசிரியன், சாந்தகுண முடையவர் காந்தீயவாதி.

பெரியகடை பாரதிபாஷிய பாடசாலையின் தலைமையாசிரியராகப் பல காலம் தொடர்ந்திருந்து சேவையாற்றும் வாய்ப்புப் பெற்றவர்.

பாடசாலை முகாமையாளரதும் பெற்றோரதும் பெருமதிப்பிற்குரியவராக விளங்கியவர்.

1925இல் ஆரம்பமான வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தில் 1940 ஆம் ஆண்டளவிலிருந்து நா. தம்பிரத்தினம் பல காலம் காரியதரிசி, தலைவராகத் தொடர்ந்து சேவையாற்றினார்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளராகவிருந்த இவரது பெரு முயற்சியால் 25.9.1945 இல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் தமிழாசிரியர் சங்கம் ஸ்தாபிதமானது.

ஒரு வருடத்துள் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழாசிரியர் இதன் அங்கத்தவராயினர்.

இதன் மூலம் இலங்கையெங்கும் பரந்து வாழ்ந்த தமிழாசிரியர் சார்பில் ஓர் மறுமலர்ச்சியை உண்டாக்க நா. தம்பிரத்தினம் பெரும் காலாயிருந்தார்.

பல மாகாண இளைச்சங்கங்களை நிறுவி இலங்கையெங்கும் உள்ள தமிழாசிரியர், தமிழ்ப் பாடசாலைகள், தமிழ் மாணவர் நலத்துக்காக இச்சங்கம் பெரிதும் உதவியது.

பல வருடகாலம் தொடர்ந்து தம்பிரத்தினம் இதன் தலைவராகச் சேவையாற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

ஆசிரியர் உலகில் பெரும்பங்கு கொண்டு உழைத்த தம்பிரத்தினம் இளைப்பாறிய பின்பும் அவ்வாலத்துக்குக்காலம் அவரது ஆலோசனைகள் சங்கத்திற்குக் கிடைத்தே வந்தன. அவர் ஆன்மசாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

க. இ. குமாரசாமி
அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னாள் காரியதரிசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஜயநலம் அகன்றால் ஆனந்தம் உதிக்கும் உண்மையை நாடுவனுக்கு மௌனம் அவசியம்.

-தர்மசக்கரம்

உதயன்
உண்மை - அச்சாமை - தமிழ் நிலைமை
இல 15, சேது ஒழுங்கை
பிள்ளையார் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 24806 22073
10 4-86
த. பெ 28

## புதிய மொந்தையில் அரசின் பழைய கள்!

இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கம் புதிய அணுகுமுறை ஒன்றை கையாள இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன

1. முதலில் பொதுத் தேர்தலை நடத்துதல்
2. தேர்தலில் வெற்றி பெறும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுதல்
   கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளின் விகிதாசாரப்படியே அமைச்சரவையில் கட்சிகளுக்கு இடமளித்தல்.
3. இனப்பிரச்சினைக்கான தீர்வை தேசிய அரசாங்கமே நிச்சயித்து, நிர்ணயித்து நடைமுறைப்படுத்தல்.

இந்த மூன்று முக்கிய அம்சங்கள் கொண்டதே அரசாங்கத்தின் புதிய திட்டம் என்று அதனோடு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஆட்சியில் உள்ள யு. என். பி அரசாங்கம் 1977 இல் ஆட்சிக்கு வந்தபோது, தமிழர் பிரச்சினையை—இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக "டமாரம்" அடித்தது

1983 ஜூலை வரை, மாவட்ட சபையை உருவாக்கியதைவிட வேறு எதையும் உருப்படியாகச் செய்யவில்லை. கறுப்பு ஜூலைக்குப் பின்னர் இன்று வரைக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதாக வெறும் அரசியல் நாடகம் நடத்தி வருகிறது அவ்வளவு தான்.

இந்தியாவின் நல்லெண்ணம் மத்தியஸ்தத்தினால் தானும் இனப்பிரச்சினை விஷயத்தில் இலங்கை அரசை உசுப்பமுடியவில்லை!

வேளைக்கு வேளை, காலம் கடத்தி, ஆட்சி பீடத்தில் தான் தொடர்வதற்கான தந்திரங்களையே அரசாங்கம் செய்து வருகிறது.

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கஷ்டங்களை, இன்னல்களை, துயரங்களை அரசு, கிஞ்சித்தாவது ஆராய்ந்து உணர்ந்ததாகத் தெரியவில்லை

அரசின் புதிய அணுகு முறையும் — திட்டமும் காலத்தைக் கடத்தும் ஒரு புதிய தந்திரோபாயம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தேர்தல் வைத்து, தேசிய அரசாங்கம் அமைத்துத்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று அரசாங்கம் இப்போது நினைப்பது ஏன்?

இவ்விஷயத்தை தன்னால் தனித்துக் கையாள முடியாது என்று உணர்ந்து விட்டதா? தனித்துச்செய்யின் சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு யு. என். பி. மட்டும் முகம் கொடுக்க வேண்டி வரும் என்ற பயமா? அல்லது சிறிமாவின் தேர்தல் "குலேப்பனே" தேசிய அரசு என்ற மருந்து கொடுத்து அடக்கும் எண்ணமா?

யு. என். பியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை நடத்த ஏனைய கட்சிகள் இணங்குமா? "ஜே. ஆரா, நானா?" என்று சிறிமா தலைமைப் போட்டிக்கு முனையமாட்டாரா?

தேர்தலுக்கு முன்னர் ஏனைய கட்சிகள் தேசிய அரசு அமைக்க ஒப்புக்கொண்டாலும் கூட, அதற்குப் பின்னர் அவை அதற்கு மறுத்துவிட்டால்...?

புதிய திட்டம் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்றே சொல்ல வேண்டும்.

இதுவும் உண்மையில் ஒரு சர்வகட்சி மாநாடு மாதிரித்தான். அதாவது புதிய மொந்தையில் பழைய கள்! 1983 இல் சர்வ கட்சி மாநாட்டுக்கு நடந்த கதி தான் இதற்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமே என்ன!!

இலங்கைக்கு உதவும் நாடுகளின் (Aid Consortium) மாநாடு எதிர்வரும் மே மாதம் நடக்கப் போகிறது. இங்கு நிகழும் அட்டூழியங்களால் இனப்பிரச்சினைத் தீர்வு இழுத்தடிக்கப்படுவதால் அந்த நாடுகள் உதவி வழங்குவதற்குப் பின் நிற்கலாம்

அப்படி ஒரு நிலை வராது தடுப்பதற்கான ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகவே இந்தப் புதிய திட்டத்தை அரசு பிரசித்தப்படுத்த முயல்கிறது என்று நாம் நினைக்கிறோம்.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும். அவர்களும் சுதந்திரம் உள்ள மக்களாக வாழ வழிவிட வேண்டும் என்ற விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் அரசுக்கு இருந்தால் இனப் பிரச்சினையைத் தீர்ப்பது மிக இலகுவான காரியம்

அது அரசுக்குப் புரியாதது அல்ல. புரிந்தும் புரியாதது போல நடிக்கிறது. அவ்வளவு தான்!

# இலங்கையில் வெளிநாட்டுச் சக்தி ஊடுருவல்

# இந்தியாவின் பூகோள - அரசியல் நலன்களைப் பாதிக்கும்

**இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவல் நிச்சயமாக இந்தியாவின் பூகோள - அரசியல் நலன்களைப் பாதிக்கும்.**

**இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறுகிறார்.**

**'ஜெண்டில் மன்' என்ற இந்திய மாத சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.**

**அப் பேட்டியின் மூன்றும் பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

**பேட்டி கண்டவர்: ஜஸ்விந்தர்சிங்.**

கேள்வி: போராளிகளினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் குடிமக்களின் படங்களை டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பொதுசனத் தொடர்பு அதிகாரி எனக்கு ஒரு முறை காட்டினரே!

பதில்: பாருங்கள். குண்டர்கள் ஊர்காவற் படையினராக ஆயுதப் படையினரால் பயிற்சியளிக்கப்பட்டு நியமிக்கப் பட்டுள்ளார்கள் அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப் பட்டுள்ளன. அவர்கள் குடிமக்கள் போல் உடை அணிந்து இருப்பார்கள் தமிழ்குடிமக்கள் மீது அடிக்கடி கட்டவிழ்த்து விடப்படுவார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அவர்களைத் தாக்கி உள்ளோம். சில பகுதிகளில் தமிழ்—சிங்கள மோதல்களும் ஏற்பட்டுள்ளன.

தமிழ்ப்பகுதிகளில் கட்டாயமாகக் குடியமர்த்தப்படுவதற்காக சிங்களவர்களைக் கொண்டுவரும் போதுதான் இம்மோதல்கள் ஏற்படுகின்றன நிலத்தைப்பாதுகாக்க மோதல்கள் இடம்பெறுகின்றன.

ஜெயவர்த்தன அரசின் பிரசார முகாமையாளர்கள் இப் படங்களைக் காட்டி போராளிகள் குடிமக்களைத் தாக்குவதாகக் கூறுவார்கள் அவர்கள் உண்மையைக் கூற மாட்டார்கள்

கேள்வி: பேச்சுக்கள் ஓர் Dead Endக்கு வந்து விட்டன. அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கும் வரை அமைதித் தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பதை நீங்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டீர்கள்.

இந்த இடைவெளியில் உங்களின் தந்திரோபாயம் என்ன? ஆயுதப்படையினருக்கு எதிரான கெரில்லா யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போகிறீர்களா?

பதில்: யுத்தம் என்று ஒன்று இப்போது இல்லை நாம் தாக்கப்படும்போது எம்மைப் பாதுகாப்பதில் தான் ஈடுபட்டுள்ளோம். தாக்குவதற்கு நாம் எப்போதும் போவது இல்லை

கேள்வி: திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தமிழர்களை வெளியேற்றிவிட்டு சிங்களவர்களைக் குடியமர்த்த ஆயுதபடையினர் முயற்சிப்பதாக செய்திகள் வருகின்றன. இந்தச் செய்திகள் உண்மை என்றால் உங்கள் நிலை என்ன?

பதில்: திருப்பித் தாக்குவதைத் தவிர வேறு வழி இல்லை பல உள்ள முறையில் திருப்பித்தாக்கி அவர்களின் திட்டங்களை முறியடிப்போம்.

கேள்வி: தமிழர் பிரச்சினையில் இந்திய அணுகுமுறை, இரு தரப்பினருக்கும் இடையில் இந்தியா மத்தியஸ்தர் என்ற முறையில் வகிக்கும் பங்கு ஆகியன குறித்து உங்களுக்கு திருப்தியா?

பதில்: மத்தியஸ்தர் என்ற முறையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண இந்தியா உளப்பூர்வமாக முயற்சிக்கின்றது இந்திய அணுகு முறை குறித்து நாம் திருப்தி அடைகிறோம். ஜெயவர்த்தனவின் அணுகுமுறை எமக்கு முற்றாகத் திருப்தி அளிப்பதாக இல்லை,

இந்திய முயற்சிகளுக்கு ஜெயவர்த்தனவின் கடுமையான, பிடிவாத போக்கே முட்டுக்கட்டையாக உள்ளது.

கேள்வி: அப்படியானால் திம்புப் பேச்சுக்களில் இருந்து போராளிகள் குழுக்கள் ஏன் வெளிநடப்புச் செய்தன?

பதில்: எமது மக்களுக்கு எதிரான இராணுவப் பயங்கரமும் இனக்கொலையுமே எம்மை வெளிநடப்புச் செய்ய வைத்தன. அதுபோன்ற நிலைமை இன்னும் இலங்கையில் நிலவுகின்றது.

கேள்வி: துணைக்கண்டத்தில் இந்திய நலனை இலங்கைத் தமிழர் பிரச்சினை பாதிக்கும் என்று நீங்கள் அடிக்கடி கூறி வருகிறீர்கள்

உங்களுடைய இலட்சியத்துக்கு ஆதரவு தேடுவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறீர்களா?

பதில்: உள்நாட்டுப் பிரச்சினையாக முன்னர் இருந்தது இப்போது சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டது இது இந்தியாவுக்கு மிகக் கவலையை அளிப்பது உள்ளது.

தமிழர் விடுதலை இயக்கங்களை அடக்கும் நடவடிக்கைகளில் வெளிநாட்டுச் சக்திகளை தீவுக்குள் இலங்கை அரசு அனுமதித்துள்ளது

இஸ்ரவேல் புலனாய்வு ஏஜன்ஸிகள், பிரிட்டிஷ் கூலிப்படைகள், பாகிஸ்தானின் ஈடுபாடு, பாரிய இராணுவ மயப்படுத்தல் ஆகியன இப்பிராந்தியத்தின் ஸ்திர நிலையைக் குழப்பியுள்ளன.

இந்த அபாயகரமான நிலைமை இந்தியாவின் பூகோள — அரசியல் நலன்களை நிச்சயம் பாதிக்கும்.

இந்துசமுத்திரம் அமைதிப் பிராந்தியமாக இருக்கவேண்டும் என்பதில் இந்தியா உறுதியான கொள்கை பூண்டுள்ளது.

(தொடரும்)

## தமிழ் முஸ்லிம்கள் பங்குபற்றினர்

அம்பாறை, ஏப். 10

மாத்தளையில் நடைபெற்ற "பொவன்புர" இளைஞர் முகாமில் அம்பாறை மாவட்டத்திலிருந்து 250 தமிழ்-முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.



பொய்யாமொழி

குறள்:

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்.

பொருள்:

அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி ஒழுகப் பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

# இனப்பிரச்சினைக்கு தீர்வின்றேல் பௌத்தர்கள் அழிந்து விடுவர்

## அனுராதபுரத்துக்கு அப்பால் செல்ல முடியாதநிலை-அனுரா

கொழும்பு, ஏப். 10

இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும் இல்லையேல் பௌத்தர்கள் அழிந்து விடுவார்கள்

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரபண்டாரநாயக்க சொன்னார்.

அக்மீமன இடைத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதவது:

தீவிரவாதிகள் ராணுவ பொலிஸ் படையினரை வடபகுதியில் கொன்று குவிக்கிறார்கள்.

அக்மீமன தொகுதியைச் சேர்ந்த 16 பேர் இது வரை வ பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றும் வட பகுதியில் கொல்லப்பட்ட தா ால என்பவரின் பிரேதம் அக்மீமன கொண்டுவரப்பட்டது.

நாட்டின் பாதுகாப்புக்கு 6 அமைச்சர்கள் உள்ளனர்

ஆனால் நாட்டை தீவிரவாதிகள் ஒரு புறம் ஆட்சி செய்கின்றனர். மறுபுறம் கொள்ளையர் அட்டகாசம் நடக்கின்றது.

சிங்களவர் அனுராதபுரத்துக்கு அப்பால் போக முடியாதுள்ளது.

இலங்கை அரசு தீவிரவாதிகளுக்கு தாலாட்டுப் பாடுகின்றது.

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

## வாசகர் திருமுகம்

## புனர்வாழ்வு வேண்டும்

யாழ்நகர் கனகசபாபதி என்பவர் 24.03.86 'உதயன்' இதழில் புனர்வாழ்வு சேவை நிறுவனங்களுக்கு என்ற தலைப்பில் எழுதியிருந்தார்

'உதயன்' 26 03 86 இதழில் வெளியான 'அகதிகளும் புனர்வாழ்வும்' தலைப்பிலான ஆசிரியர் தலையங்கம் படித்தேன். அது முற்றிலும் உண்மை என்பதை உணர்ந்தேன்

எனது குடும்பத்துடன் நீர்கொழும்பு கொச்சிக்கடையில் பிரபல புடைவை வர்த்தகராக தொழில் செய்து வந்தேன்.

30 ஆண்டுகள் கஷ்டப்பட்டு உழைத்த பொருள்கள் யாவும் 26 07 83 இல் இடம்பெற்ற கலவரச் செயல்களில் சாம்பலாகப் போயின சுமார் 9 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

உடுத்தி இருந்த உடுப்புக்களோடு குடும்பத்துடன் அளவெட்டி வந்து சேர்ந்தேன்

இன்றுவரை அரசாங்கமோ, புனர்வாழ்வுச் சேவை நிறுவனங்களோ எனக்கும் எனது குடும்பத்துக்கும் உதவவில்லை. காப்புறுதி நஷ்டஈடும் இடைக்கவில்லை.

இவைபற்றி எல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் தான் 'உதயன்' இதழில் மேற்கண்ட தலையங்கத்தைக் கண்டேன்.

இனித்தான் எனக்கும் எனது குடும்பத்துக்கும் எதிர்காலம் உள்ளது என்பதை உணர்ந்தேன். எல்லா புனர்வாழ்வு சேவை நிறுவனங்களும் ஒன்று இணைந்து எனது குடும்பத்துக்கு புனர்வாழ்வு அளிக்க முன்வரவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

த. கனகலிங்கம்,
அளவெட்டி.

## சோமஸ்கந்தா மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், ஏப்.10

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி மாணவன் செல்வன் கே. எஸ். இரத்தினசீலம் எட்டுப் பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்று பாடசாலை வரலாற்றில் சிறந்த சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

# மகாவாக்கியங்களை அருளிய நல்லூர் செல்லப்பா சுவாமிகள்

## யோகசுவாமிகள் குருநாதர்; அவரின் குருபூசைத்தினம் இன்று

"ஒரு பொல்லாப்புமில்லை" "எப்பவோ முடிந்த காரியம்" "நாம் அறியோம்", "முழுதும் உண்மை" — இவை இன்று நாடு அறிந்த மகா வாக்கியங்கள். இவற்றை அருளியவர் நல்லூர்ச் செல்லப்பா சுவாமிகள். அருளிய இடம் நல்லூர்த்தேரடி. அருள் பெற்ற ஒருவர் சிவயோக சுவாமிகள்.

சகல சாஸ்திரங்களின் சாரம் கொண்டவை இம்மகா வாக்கியங்கள். நிறை மொழி மாந்தர்களாதலின் மந்திரங்கள்.

இவற்றின் கருத்தை உள்ளவாறு உணர்ந்து மனனஞ் செய்வோர் பேரானந்தப் பெருவாழ்வை எய்துவர் என்பது திண்ணம்.

இவ்வாறு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த யோகசுவாமிகளின் சிவதொண்டன் கூறுகின்றது. அது மேலும் கூறுவனவற்றைக் கருத்தில் இருத்துவோமாக.

அமிர்த வாக்கியங்களே இம்மகா வாக்கியங்கள்.

தத்துவமயமானது இவ்வுலக வாழ்வு. தத்துவாதீதமானது ஞானம்.

சிவயோக சுவாமிகள் மகாவாக்கிய உபதேசத்தால் தத்துவாதீத நிலையைக் காட்டியவரே நல்லூர்ச் செல்லப்பாச் சுவாமிகள்

இருவரும் விவேகானந்தரும் இராமகிருஷ்ணரும் போன்றவர்கள். இருவரும் ஒரு [illegible]

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனையிலே செல்லப்பா சுவாமிகளின் அருள் உபதேசங்களை முழுமையாகப் பெறும் வாய்ப்பு எல்லோர்க்கும் எளிதிலே இட்டுகின்றது.

இன்று ஆங்கிலமொழி மூலம் அது அனைத்துலகத்தையும் ஆண்டு வருகின்றது. அத்தகைய அரும் பெரும் மந்தரங்கள் விளங்கும் நற்சிந்தனைப் பாடல்களை நாம் தினமும் ஓதி உணர்வோமாயின் ஒரு பொல்லாப்புமில்லாத நிலையை எளிதிலே எல்லோரும் பெறுவோம் என்பது திண்ணம்.

நல்லூரையும், செல்லப்பரையும் சிறப்பாக நற்சிந்தனையிலே காணலாம்.

சித்தாந்த கலாநிதி
க. கணபதிப்பிள்ளை

அருவமும், உருவுமாகி, அநாதியாய்ப் பலவாய், ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக், கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஒரு திரு முருகன் வந்து உலகம் உய்யக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமை வாய்ந்தது நல்லூர்

நல்லூரின் சமீப காலத்தில் அவதரித்தவர். நானிலத்து மாந்தர்களின் தொல்லைப் பிறவி அறுத்து ஆட்கொண்ட செல்வர்.. 'பித்தன்' என்று சாதாரண சனங்களால் அழைக்கப்பட்ட சிறப்பு வாய்ந்தவர்; பரமஞானி என்று அறிந்தோரால் போற்றப் பட்டவர்; சமயங் கடந்த மோன சமரச நன்னிலை பெற்றவர்; சாகலை ஆனந்தபோகம் புசித்திருந்தவர்; சிவதொண்டர்களை விளங்கியவர்— வீடுபேற்றை விரும்பித் தம்மிடம் சரண்புகுந்த பக்குவ ஆன்மாக்களை உய்வித்தத் தொருடைத் திருவாய் மலர்ந்த

நல்லூரின் ஆட்டக்காரன், நான் வணங்கும் குருநாதன் கல்லைக் கரைக்குஞ் சித்தன் கருணைபூத்த திருமுகத்தன் இல்லை என்ற சொல்லை இல்லாமல் ஆக்கிடுவான், அல்லும் பகலும் என்றன் அகத்தினிலே வாழ்ந்திடுவான்.

ஒரு பொல்லாப்புமில்லை என்பான், உண்மை முழுதும் என்பான், கருப்பையிலே வராமல் காத்து என்னை ஆண்டு கொண்டான். தேரடியில் வீற்றிருப்பான். செல்லப்பன் என்னும் பெயரான் "ஆர் அறிவார்" என்று சொல்வான். அன்னையைப் போல் அன்புடையான், பொய் சொல்லாதே என்றான், மெய்யும் சொல்லாதே என்றான் வல்லபங்கள் பேசி வந்தோர் வாயை அடக்கிடுவான்

இத்தகைய மாபெரும் பெருமைக்குரிய மகா குருநாதர் 1915, பங்குனி வெள்ளி அச்சுவினி நட்சத்திரத்தில் மகா சமாதி அடைந்தார். அவர் காட்டிய வழியிற் சென்று பேரானந்தம் பெறுதல் நம் கடமை.

# பயிற்சி இல்லாத தாதிமாரால்

## சத்திர சிகிச்சைகள் ரத்து

பயிற்சி இல்லாத தாதிமார்கள் வேலை செய்வதனால் முக்கிய சத்திரசிகிச்சைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அனாவசிய மரணங்களும் இடம் பெறுகின்றன.

இப்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

40 சதவீதமான தாதிகள் வேலைக்குத் திரும்பி உள்ளனர் என்று அரசு அறிக்கை கூறுகிறது.

உண்மையில் 23 சதவீதமான தாதிகளே வேலைக்குத் திரும்பியுள்ளனர். பயிற்சி இல்லாத தாதிகளினால் முக்கிய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

ஒரே நேரத்தில் பல நோயாளிகளுக்கு மயக்க மருந்து செலுத்த முடியாத நிலைமையும் நிலவுகிறது

ஆகவே அரசு, தாதிமாரின் வேலைநிறுத்தத் [illegible] வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## லீவு எடுக்காத ஆசிரியருக்கு பாராட்டு விழா

வட்டுக்கோட்டை, ஏப். 10

கடந்த ஆண்டு லீவு எடுக்காது சேவையாற்றிய யாழ் மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களுக்கு மாவட்ட ரீதியில் பாராட்டுவிழா நடத்தப்படும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறார்.

# தீவிரவாதிகளை ஒழித்த பின்புதான்

## தேர்தல் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஏப்ரல் 10

தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டிய பின்னர்தான் பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

இப்படிச் சொன்னார் பிரதமர் ஆர்.பிரேமதாச.

அக்மீமன இடைத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பிரதமர் பேசினார்

பிரதமர் மேலும் சொன்னதாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போகும் ஒவ்வொரு வாக்கும் தீவிரவாதிகளை பலவீனமடையச் செய்யும் வாக்காகும்.

எதிர்க் கட்சிகள் எவ்வளவு தான் கத்தினாலும் பொதுத் தேர்தல் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டிய பின்னர் தான் நடத்தப்படும்.

இப்படிப் பிரதமர் சொன்னார்

# பறையனாலங்குளம்

## கணேசபுரம் மக்கள் செல்லச்சாமியிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஏப். 10

வவுனியாவில் பறையனாலங்குளம் - கணேசபுரம் பகுதிகளில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் அகதிகள் தங்கள் அவல நிலைமை பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம்.எஸ். செல்லச்சாமியிடம் முறையிட்டுள்ளனர்.

சின்னப் பண்டிவிரிச்சான் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எம். உதயகுமார் ஊடாக திரு செல்லச்சாமிக்கு அனுப்பப்பட்ட மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது;

1977 வன்செயலில் மலையகத்தில் பாதிக்கப்பட்டு வவுனியாவுக்கு வந்தோம்.

கடந்த 8 ஆண்டுகளாக காடுகளைக் கழனிகளாக்கி நாட்டுக்கு உழைத்தோம்.

இன்று மீண்டும் கொலை, மானபங்கப் படுத்தல், தீயிடல் ஆகிய சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுள்ளோம். [illegible] பாதிக்கப்பட்டவர்கள் மகஜரில் முறையிட்டுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BOND INSTITUTION**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
O/L விஞ்ஞானம்
ஆசிரியர்கள்;
MR. BOND
MR. J. R. SOORI
நேர அட்டவணை: திங்கள், புதன், வெள்ளி காலை 8.00 மணி.

# உதயன்

10. 04 1986 வியாழக்கிழமை

**BRIGHT TUITION CENTRE**
செம்பியன் லேன் - கொக்குவில்.
O/L
விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: திங்கள், புதன், வெள்ளி காலை 9 30 மணி

## ஆயுள்வேத மாணவர் போராட்டம் நிறுத்தம்

நல்லூர் ஏப்ரல் 10

ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்களின் மூன்று கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன

வீதி மறியல் கைவிடப்பட்டது.

டி. ஏ. எம். பரீட்சையை அரசாங்க அங்கீகாரத்துடன் நடத்தக் கோரியும் பரீட்சையில் தேறிய மாணவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கக் கோரியும் கடந்த இரண்டு நாட்களாக ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

நேற்று பிரவுலி வீதியில் உள்ள இவர்களது கல்லூரிக்கு முன்பாக வீதித்தடையும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் நேற்று வட இலங்கை சுதேச வைத்தியர் சங்கம் அவசர அவசரமாகக் கூடி நான்கு தீர்மானங்களை எடுத்தது.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு.

1. ஆயுள் வேதப் பரீட்சை ஆணையாளரிடம், பரீட்சையை நடத்தும்படி வேண்டுதல்.

2. வட இலங்கையிலுள்ள [illegible] சித்த மருத்துவ பீடத்தின் ஊடாக பரீட்சையை நடத்தும்படி கோருதல்.

3. இந்த இரண்டு கோரிக்கைகளும் சாத்தியப் படாதவிடத்து, வட இலங்கை சுதேச சபையினால் நடத்தப்படும் பரீட்சைக்கு அங்கீகாரம் கோருதல்.

4 இப் பரீட்சையில் தேறி பதிவின்றி இருப்பவர்களுக்கு பதிவுக்கான ஏற்பாடுகளை செய்தல்.

இந்த நான்கு தீர்மானங்களும் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன

பின்னர் மாணவர்களின் மறியல் போராட்டமும் வீதித் தடையும் நீக்கப்பட்டன.

மீண்டும் இக்கல்லூரி எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படலாம் என வட இலங்கை சுதேச வைத்திய சபை உபதலைவர் திரு. சி. வேலு பிள்ளை தெரிவித்தார்.

மேற்கண்ட தீர்மானங்கள் அமுலுக்கு வரும் வரை மாணவர்களின் பரீட்சையும் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது

## வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளில் நள்ளிரவு கொள்ளை

(பலாலி, காங்கேயன் செய்தியாளர்)

பலாலி, ஏப்ரல் 10

வீமன்காமம், மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் செவ்வாய் நள்ளிரவு கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

வலிகாமம் வடக்கில் வீமன்காமம் கிராமத்தில் மாவைக்கந்தன் இண்டஸ்ரீஸ் உரிமையாளர் திரு இராமநாதனின் வீட்டில் நடந்த கொள்ளை பற்றித் தெரியவருவதாவது:

செவ்வாய் நள்ளிரவு 12 மணிக்கும் 1 30 மணிக்குமிடையில் ஆயுதந் தாங்கிய சுமார் முப்பது பேர் கொண்ட கோஷ்டி ஒன்று பெரும் இரும்புக் கம்பிகளால் கதவைப் பிரித்து வீட்டினுள் நுழைந்தது வீட்டுக்காரரையும் அவரது மனைவியையும் கட்டிலுடன் வைத்துக் கட்டினார்கள்.

இருமகன்மார் தாக்கப்பட்டனர். வீட்டுக்காரரும் தாக்கப்பட்டார்.

அவரிடமிருந்த மூன்று லட்சம் ரூபா ரொக்கப் பணம். 20 பவுண் தங்க நகைகள் ஆகியவற்றை இவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றனர்

திருமதி இராமநாதனின் காதில் இருந்த தோடுகள்கூடக் கழற்றி எடுக்கப்பட்டன

திரு. இராமநாதனின் வீட்டில் இருந்த சி. டி. 200 ரக மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் செல்ல முயன்றபோதும் பின்பு அம்முயற்சி கைவிடப்பட்டது.

மாவிட்டபுரத்தில் திரு எஸ். சதாசிவம் என்பவரது வீட்டிலும் கொள்ளை இடம்பெற்றது.

நள்ளிரவு 12 மணியளவில் வந்த ஆயுதபாணிகளான 25 பேர் கொண்ட கோஷ்டி ஒன்றே கொள்ளையை நடத்தியது.

வீட்டின் முன்கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களைத் துப்பாக்கி முனையில் பணயம் வைத்துவிட்டு அறைகளைத் திறந்து சல்லடை போட்டுத்தேடினர்.

அங்கு இருந்த நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றைச் சுருட்டிக் கொண்டு அவர்கள் தலைமறைவாகினர்.

வீட்டுக்காரரின் மகன் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி நடத்துபவரெனவும் அவரது ஒருதொகைப் பணமும் அபகரிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

## ஒய்வூதியம் ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியம் வழங்கப்படும்.

காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## தேவை

தினசரி பத்திரிகையில் கடமை புரிவதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- * தினசரிப் பத்திரிகையில் கடமை புரிவதற்கு அனுபவமுள்ள இரவு மேற்பார்வையாளர்.
- * அனுபவமுள்ள விளம்பர பிரதிநிதிகள்.
- * விளம்பர விநியோகம் சம்பந்தமான அனுபவமுள்ள விநிதர்கள்.
- * அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள்.
- * ஹைடில்பேர்க் ஆட்டமட்டிக் சிலிண்டர இயக்குநர்கள்
- * அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற காரியாலய பியோன்கள்

விண்ணப்பங்கள் சகல விபரங்களுடனும் 19-04-86ஆந் திகதிக்கு முன்னர் முகாமையாளர், த பெ இல: 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; நியூ எக்ஸ்போட் லிமிட்டெட்,307, மின்சாரநிலை வீதி யாழ்ப்பாணம். அச்சகம்; 15,8 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்டு திகதி 10-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ/60 W 86

இலங்கை விமான விபத்தில்

# பாக். விமானி கொல்லப்பட்டார் என்கிறார் எம். ஜி. ஆர்

புதுடில்லி, ஏப்ரல் 9

இலங்கையில் இடம் பெற்ற விமான விபத்து ஒன்றில் பாகிஸ்தான் விமானி ஒருவர் கொல்லப்பட்டார் எனக் கூறப்படும் செய்தியை தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன், புதுடில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்ஸில் கூட்டத்தில் சுட்டிக் காட்டினார்

இக்கூட்டத்துக்கு பிரதமர் ராஜீவ்காந்தி தலைமை வகித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக் கழகக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தே திரு. எம் ஜி இராமச்சந்திரன் பேசினார்

திரு. இராமச்சந்திரன் மேலும் சொன்னதாவது;

இலங்கை அரசாங்கம் ஒரு கையில் ஒலிவ் இலையையும் மறு கையில் இனப் படுகொலைக்கான இராணுவ பலத்தையும் வைத்துக்கொண்டு செயற்படுகிறது.

இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண வேண்டும் என்று இலங்கை உண்மையிலேயே விரும்பினால் முதலில் ஆயுதப் படையினரை



முகாமகளில வைத்து இருக்கவேண்டும்.

ஆயுதப் படையினர் தான் தமிழர் பகுதிகளில் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்

தமிழ்ப் போராளிகள் தங்களைப் பாதுகாப்பதில் தான் குறைந்த பட்ச ஆயுதங்களை வைத்துக் கொண்டு போராடுகின்றனர்

சமாதானமும் நீதியும் இல்லாமற் போனதினால் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டியேற்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சர்வதேச ரீதியில் பொதுவான சக்தி ஒன்று பின்னணியில் இருந்து இயங்குவது தெரிகின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவுக்குத் தேசிய, சர்வதேசரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகி விட்டது.

இந்தியாவைச் சுற்றி உள்ள எல்லா நாடுகள் எல்லாம் ஒரு கூட்டு வைத்து இயங்குகின்றன.

இலங்கையில் ஆயுதப் படையினர் வகைதொகை இன்றி தமிழர் மீது வன்செயல்களை நடத்துவதை நிறுத்தும்படி இலங்கை அரசை பிரதமர் கேட்டுக்கொள்ளவேண்டும்.

அமைதித் தீர்வு காணுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக இது அவசியம் தமிழகத்திலும் உகந்த சூழ்நிலை உருவாகவும் இது அவசியம்

பஞ்சாப் பிரச்சினை வேறு; இலங்கைத் தமிழர் பிரச்சினை வேறு.

பஞ்சாப்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் உண்டு. தவறாக வழி நடத்தப்படும் சில இளைஞர்களே பஞ்சாப்பில் வன்முறையில் ஈடுபடுகின்றார்கள்.

இலங்கையில் தமிழர் நிலை அதுவல்ல

பஞ்சாப் பிரச்சினையுடன் இலங்கைத் தமிழர் நிலையை ஒப்பிட அனுமதிக்கக்கூடாது

—இப்படி திரு இராமச்சந்திரன் சொன்னார்.

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டால்கெடுக்கப்படும் நிதி உதவிகளிலும் பார்க்கக் கூடுதல் நிதி உதவி அளிக்கப்படும் என்றும் இலங்கைக்கு இந்த நாடுகள் உறுதி கூற வேண்டும்—

ஏற்கவே அளிக்கப்பட்ட நிதி உதவியுடன் இலங்கை அரசு செயற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தொடர்ந்து அந்த நாடுகள் உதவலாம்— இப்படி மூன்றாம் அமைச்சர் திருமதி ஜூடித் ஹார்ட் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மே மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுக் கூட்டத்தில் உறுப்பு நாடுகள் இந்த நிபந்தனைகளை இலங்கைக்கு வலியுறுத்திக் கூறவேண்டும் என்றும் திருமதி ஜூடித் ஹார்ட் தெரிவித்துள்ளார்

இதே வேளையில் இலங்கை, இந்தியா ஆகிய இரண்டுக்கும் சினேகநாடுகளாக இருக்கும் சில நாடுகள், மேலும் இரத்தக் களரியை ஏற்படுத்தாமல், இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும் என்று கோரியுள்ளன.

இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கு இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## புதியயோச....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

க்சர் ஹமீத் செல்லவிருக்கின்றார்

கூடவே புதிய யோசனைகளையும் கொண்டு செல்கிறார்.

இந்தியாவில் இருந்து தான் ஒருவர் இலங்கைக்குப் போக வேண்டுமா? இலங்கையில் இருந்து ஒருவர் இங்கு வந்து பேசலாமே- இப்படி இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் கூறி இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ் தபாலக .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தாமதமாகின.

சம்பவம் பற்றிய விவரம் வருமாறு.

நேற்று முன்தினம் வவுனியாவில் இருந்து யாழ் தபால் பொதிகள் இ. போ. ச பஸ் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

இந்த பஸ்ஸில் தபாலக ஊழியர்களும் பயணம் செய்தனர்

மாங்குளம் இராணுவ முகாமருகே பஸ் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

பின்னர் தபால் ஊழியர்களான முஸ்லிம் ஊழியரையும் மற்றைய ஊழியரையும் அங்குள்ள சிப்பாய்களில் ஒருவர் தாக்கினாராம்.

இதனால் செல்லத்தம்பி என அழைக்கப்படும் தமிழ் ஊழியர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் பின் வீடு திரும்பினார்.

## தலைமன்...

(1 பக்கத் தொடர்ச்சி)

நில் ஜீப் சிதறிய நிலையில் காணப்பட்டது. மீன்களும் சிதறிக் கிடந்தன.

இதன் பின்னர் அந்த இடத்துக்கு ஹெலிக் கொப்டர்களும் ராணுவ கடற்படை வாகனங்களும் விரைந்து சென்றன.

அவர்கள் இறந்தவர்களின் சடலங்களையும் எடுத்துக் கொண்டு ஜீப்பையும் கட்டி இழுத்து வந்தனர்.

[illegible] ஹெலிக்கொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்

## யாழ். மாவட். .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் பெறுவதற்கு ஒரு குழுவை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இப்படி யாழ் அரச அதிபர் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலவேளைக்கு அவை கொடுக்கப்படும்.

இனப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை அதற்கு அரசியல் ரீதியில் தான் தீர்வு காணப்பட வேண்டும், இராணுவ ரீதியில் அல்ல

இலங்கையில் பாகிஸ்தான் தலையிடு உள்ளது தெரிகின்றது. அந்த அச்சுறுத்தலில் இருந்து இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது.

சில எம். பி. க்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பலிராம் பகத் சொன்னதாவது;

இலங்கையின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் உட்பட்ட ஓர் அமைதித் தீர்வுக்கே இந்தியா பாடுபடுகின்றது.

ஆகவே தமிழர் அமைப்புக்களை அங்கீகரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படி அமைச்சர் சொன்னார்.

சம்பவம் நடந்த இடத்தில் ஆயுதப்படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

## விளையாட்டரங்கு

22 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டம்

## அன்ரனீஸ் சாம்பியன்

### ஆட்டத்தை கோட்டைவிட்ட குருநகர் அணி

விளையாட்டுச் செய்தியாளர் சண் ஜோன்சன்

யாழ்ப்பாணம், ஏப் ல் 10

நேற்று நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சாம்பியனானது.

இந்த அணி குருநகர் விளையாட்டுக் கழக அணியை 2க்கு 1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 22 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப்போட்டியிலேயே சென் அன்ரனீஸ் அணி சாம்பியனானது.

ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் சென் அன்ரனீஸ் அணியின் சார்பில் ப. செபநேசன் முதலாவது கோலை போட்டார்.

ஆட்டநேர இடைவேளைக்கு முன்பாகவழங்கப்பட்ட பெனல்டி உதையை குருநகர் அணி கோட்டைவிட்டது

ஆட்டநேர இடைவேளைக்குப்பின் 10 ஆவது நிமிடத்தில் சென் அன்ரனீஸ் அணி இரண்டாவது கோலைப் போட்டது. இந்தக் கோலை எஸ்.எல். ரேய் போட்டார்.

அதன்பின் திறமையாக ஆடிய குருநகர் அணி ஆட்டம் முடிவடைய 5 நிமிடம் இருக்கையில்ஒரு கோலைப் போட்டது.

இந்த அணிக்கான ஒரு கோலை ஏ. ஆரியராஜா போட்டார்.

உதைபந்தாட்ட ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக அமைந்த இந்த ஆட்டத்துக்கு வி. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

இந்த ஆட்டம் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டு அதிகாரி திரு. ஆர். ஜேரான் இராஜசிங்கம் நிறைவேற்றியுடன் செய்திருந்தார்.

## சிவன் விளையாட்டு கழக (பி) அணி வெற்றி

யாழ்ப்பாணம் ஏப்ரல் 10

கடந்த திங்கட்கிழமை நடை பெற்ற கர பந்தாட்டப் போட்டியில் சிவன் விளையாட்டுக்கழக (பி) அணி வெற்றி பெற்றது.

இந்த அணி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக "ஏ" அணியை 15—12, 15—6 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கர பந்தாட்ட "நொக்கவுட்" போட்டியின் ஓர் அங்கமாக இது நடைபெற்றது.

அன்று நடைபெற்ற மற்றொரு போட்டியில்- சிவன் விளையாட்டுக் கழக "ஏ" அணியை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' அணி 15—13, 16—6, 1—0 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிகளுக்கு ஏ. தங்கராஜா சப்டன் டி. ஏ. எம் உணசிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இந்த 'நொக்கவுட்' போட்டியின் அரை இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ள பின்வரும் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

திருநெல்வேலி சைவ எம். எச். எஸ். விளையாட்டுக் கழக "ஏ" அணி, தொய்யாத் தோட்டம் சனசமூக நிலைய விளையாட்டுக் கழக "ஏ" அணி

திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழக "பி" அணி.

பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக "ஏ, பி" அணிகள்.

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக "பி" அணி. அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக "ஏ" அணி நீர்வேலி விளையாட்டுக் கழக அணி.

## வவுனியாவில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் அல் ஹாஜ் எம். எச். முகம்மதுவின் பணிப்பின் பேரில் இம்மாதம் 11ஆம் 12ஆம், 15ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ் தேவி ரயில் வவுனியா வரை நீடிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இன்று காலை 7மணிக்கு புறப்படும் பஸ்கள் அநுராதபுரம் ரயில் நிலையம் சென்று அங்கு பிரயாணிகளை இறக்கிய பின்னர், வவுனியாச் சாலையில் தரித்து நின்று நாளை வவுனியா வரை வரும் 'யாழ் தேவி' பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் புறப்படும்.

ரயில் வவுனியா ரயில் நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு வந்து பிற்பகல் 2.00 மணியளவில் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும்

11 ஆம் 12 ஆம் திகதிகளில் காலை 8 மணியளவில் யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்கள் வவுனியா ரயில் நிலையத்திற்கு இணைப்பு சேவையாக செயல்படும்.

இதேபோன்று 15 ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து 15 பஸ்கள் வவுனியா ரயில் நிலையத்திற்கு இணைப்புச் சேவையாக நடத்தப்படும்.

இந்த பஸ்களுக்குரிய ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்ய விரும்புபவர்கள் 12ஆம் 13ஆம் 14 ஆம் திகதிகளில் யாழ் மத்திய பஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. க தனபாலசிங்கம் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காணிக்கை . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து வெளியேறியவர்களில் 3 பேர் பழைய இருப்பிடங்களைப் பார்க்க கடந்த திங்கட்கிழமை சென்றனர்.

அச்சமயம் ஆயுதப் படையினரும் ஊர்காவல் படையினரும் அப்பகுதிகள் ஊடாக வந்தபோது இம் மூவரும் அவர்கள் கண்களில் தென்பட்டு விட்டனர்.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மறுநாள் காட்டில் கண்டதுண்டமாக வெட்டப்பட்ட நிலையில் சடலங்களாகக் கிடந்தனர்.

## மலிவு விற்பனை

SVP சிவம் ஸ்தாபனத்தாரின் புதுவருட மலிவு விற்பனை.

சகல விதமான புடவை வகைகளும், சிறுவர், சிறுமிகளுக்கான தயாரித்த உடுப்பு வகைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

SVP சிவம்
(நவீன சந்தை)
14 'A' மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org